[1683 பிப்ரவரி 10

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) சட்டமன்ற (தகவின்மை தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு சட்டமன்றத் (தகவின்மைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்பு சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு டாக்டர் எச் வி ஹண்டே : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்திய முறை மருத்துவர்கள் மாநிலப் பதிவேடு ஏற்பளிப்புச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று. அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.